## சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – தொழில்நுட்பக் கல்வி துறையின் மூலம் வருடத்திற்கு இரண்டு முறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட்டு வரும் வணிகவியல் (சுருக்கெழுத்து, தட்டச்சு மற்றும் கணக்கியல்) தேர்விற்கான விண்ணப்பங்கள் இணையதளத்தின் (Online) மூலமாக பெறுவதற்கான வசதியை ஏற்படுத்தி செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (பி1) துறை

அரசாணை (நிலை) எண்.80 நாள்: 14.05.2019.

விகாரி வருடம், சித்திரை 31,
திருவள்ளுவர் ஆண்டு 2050.
படிக்கப்பட்டவை :

தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண். 104119/ஆர்4/2019,
நாள் 24.04.2019 மற்றும் 08.05.2019

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், வணிகவியல் தேர்வுகள் நடத்தப்படுவது தொடர்பாக கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

(i) தொழில்நுட்பக் கல்வி துறையின் மூலம் வருடத்திற்கு இரண்டு முறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் வணிகவியல் தேர்வுகள் (சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல்) நடத்தப்பட்டு வருகின்றது. இத்தேர்விற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் தேர்வாளர்களால் பூர்த்தி செய்யப்பட்டு தபால் மூலமாக மற்றும் நேரடியாக தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பெறப்பட்டு, விண்ணப்பதாரரின் பெயர், வயது, கல்வித்தகுதி மற்றும் கட்டணம் குறித்து சரிபார்க்கும் பணி மற்றும் இந்த விவரங்களை கணினியில் பதிவு செய்யும் பணிகள் அனைத்தும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படுவதால் கால விரயமும், வேலை பளுவும் அதிகமாகின்றது.

(ii) இப்பணியின் மூலம் ஏற்படும் கால விரயத்தினை தவிர்க்கும் பொருட்டு, வணிகவியல் தேர்வுக்கான விண்ணப்பங்களை இணையதளம் (Online) மூலமாக பெற்று, விண்ணப்பதாரர் தங்கள் பெயர், வயது, கல்வித் தகுதி ஆகியவற்றை உள்ளீடு செய்து, பதிவு இறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தினை, உரிய ஆவணங்களுடன் இயக்ககத்திற்கு அனுப்பும் பட்சத்தில், இயக்ககப் பணியாளர்கள் சரிப்பார்ப்பு பணியினை மட்டும் மேற்கொண்டு, விண்ணப்பதாரர்களுக்கு, நுழைவுச்சீட்டை (Hall Ticket) விரைவாக இணையதளத்தின் மூலம் அனுப்பி வைக்க இயலும். மேலும், விண்ணப்பதாரர்களும் இணையதளத்தின் மூலம் நுழைவுச்சீட்டை (Hall Ticket) எளிதாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

....2

(iii) மேலும், தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள வசதிகளின் அடிப்படையில், வணிகவியல் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் இணையதளம் (Online) மூலம் பெறப்பட்டு இயக்ககத்தால் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இதனால் அரசுக்கு எந்த ஒரு செலவினமும் இல்லை. வணிகவியல் தேர்வுக்கு தற்சமயத்து on-line மூலம் விண்ணப்பிப்பதற்கு தனியாக Domain உருவாக்கப்பட்டு, அதில் அதன் அடிப்படையில் Private Candidate Application மற்றும் Approved Commercial Institute எனத் தனித்தனியாக Online இணைப்பு வழங்கப்படும். பின்னர் உரிய விவரங்களான பெயர், பிறந்த தேதி, கல்வித் தகுதி, அஞ்சல் விவரம், விண்ணப்பிக்கும் பாடப் பிரிவு போன்றவற்றை உள்ளீடு செய்து Submit கொடுத்த உடன், கட்டணம் செலுத்துவதற்கான on-line payment Gateway மூலம் செலுத்திய பின், Online விண்ணப்ப நகல், பிறந்த தேதி ஆதாரத்திற்கான சான்றிதழ் மற்றும் உரிய கல்வி சான்றிதழ்கள் ஆகியவற்றை தேர்வு வாரியத்திற்கு அனுப்ப வேண்டும்.

2. எனவே, இனிவரும் காலங்களில் வணிகவியல் (சுருக்கெழுத்து, தட்டச்சு மற்றும் கணக்கியல்) தேர்வுக்கான விண்ணப்பத்தினை இணையதளத்தின் (Online) மூலமாக விண்ணப்பதாரர்கள் பெறுவதற்கான வசதியை ஏற்படுத்துவதற்கு உரிய அனுமதி வழங்குமாறு தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, தொழில்நுட்பக் கல்வி துறையின் மூலம் வருடத்திற்கு இரண்டு முறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட்டு வரும் வணிகவியல் (சுருக்கெழுத்து, தட்டச்சு மற்றும் கணக்கியல்) தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் அனைத்தையும் இணையதளத்தின் (Online) மூலமாக விண்ணப்பதாரர்கள் பெறுவதற்கான வசதியை ஏற்படுத்தி செயல்படுத்துவதற்கு, தொழில்நுட்பக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
நகல்:
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்துறை (கல்வி–I), சென்னை–9.
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்